சிவகங்கை மாவட்டக் கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திரைப்பட நடிகர் நிஷாந்த் ரூசோவிற்கும் இளையான்குடி தாலுகா கல்லடிதிடல்எட்வர்டுஜோசப் – மஞ்சுளா மேரி மகள் இ.ஸ்நேகாகேத்தரின் ஆகியோரது திருமணத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமைஏற்று வாழ்த்தினார். உடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., திருமதி மணிமேகலை தங்கம்தென்னரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் என்.குணசேகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மருமகன் ராஜாஸ்டீபன், மகள் ஆர்.ஜெம்மாநிபிலா, க.அழகையா ஆகியோர் உள்ளார்கள்.

உறுப்புக் கொடையாளிகளுக்கு அரசு சார்பில் செய்யப்படும் 250வது மரியாதை! மூளைச்சாவு அடைந்த

உறுப்புக் கொடையாளி உடலுக்கு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலரஞ்சலி!

சென்னை – இராஜீவ்காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாலை அணிவித்து வணங்கினார்!

சென்னை, செப்.8-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (07.09.2024) சென்னை, இராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல்லாவரத்தைச் சேர்ந்த திரு. முரளி (வயது 59) என்பவர் மூளைச் சாவு அடைந்த அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டதைத் தொடர்ந்து அவரது திருவுடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார். இன்றைய நிகழ்வு மூளைச்சாவு அடைந்த உறுப்புக் கொடையாளிகளுக்கு அரசு சார்பில் செய்யப்படும் 250வது அரசு மரியாதை என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

250வது உடலுறுப்பு தானம்

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 200708 ஆம் ஆண்டுகளில் யுகேந்திரன் மறைவுக்கு பிறகு அன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் மூளைச்சாவு அடைந்தவர்களின் உடலுறுப்பு தானம் பெறும் மகத்தான திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அந்தவகையில் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில் இன்றளவும் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. இந்தநிலையில் முதலமைச்சர் அவர்கள் 2023 செப்டம்பர் திங்கள் 23ஆம் தேதி உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யும் திட்டம் தொடங்கப்பட்டது. முதல் உடலுறுப்பு தானம் செய்த நபருக்கு தேனி மாவட்டம், சின்னமனூருக்கு நான் நேரில் நேரில் சென்று தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு மரியாதை செலுத்தினோம். தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள் என்று இந்த அரசு மரியாதை செலுத்தும் நிகழ்வுகளில் பங்கேற்று மூளைச்சாவு அடைந்தவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தி கவுரவித்து வருகின்றனர். இந்த திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருவதைத் தொடர்ந்து ஒடிசா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து தற்போது வரை 250 மூளைச் சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்பு தானம் பெறப்பட்டுள்ளது. தற்போது சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் 250வது மூளைச் சாவு அடைந்தவருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு பிறகு இதுவரை உடலுறுப்பு தானம் வழங்க பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14300, இது மிகப்பெரிய மகத்தான மனித நேயம் செயலாகும். இது வரை உடலுறுப்பு தானம் செய்யப்பட்ட 250 பேரின் மூலம் பெறப்பட்ட உடலுறுப்புகளின் எண்ணிக்கை 1330 ஆகும். இதில் இருதயம் 68, நுரையீரல் 77, கல்லீரல் 193, சிறுநீரகம் 417, கணையம் 2, சிறுகுடல் 6, கைகள் 3 என்று மிகப்பெரிய அளவில் மக்களின் உயிர்களை காத்திருக்கிறது இத் திட்டம். இந்த மூளைச்சாவு அடைந்த 250 பேரில் அரசு மருத்துவமனைகளிலிருந்து 138 பேர் உறுப்பு தானமும், தனியார் மருத்துவமனைகளிலிருந்து 112 பேர் உடலுறுப்பு தானமும் பெறப்பட்டிருக்கிறது.

குறிப்பாக சென்னை இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இந்த ஆண்டு மட்டும் 32 நபர்கள் உடலுறுப்பு தானங்கள் செய்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 185. அதில் இராஜீவ்காந்தி மருத்துவமனையில் மட்டும் 32 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 2022 ஜூலை 31ஆம் நாள் அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில் தமிழ்நாட்டில் 14 மருத்துவக்கல்லூரிகளில் மட்டுமே உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு அனைத்து அரசு மருத்துவக்கல்லூரிகளிலும் மருத்துவமனைகளிலும் இதற்கான உரிமங்கள் பெறப்பட்டு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய தொடங்கப்படவுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் மூலம் ரூ.22 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் நோயாளிகள் பதிவு மற்றும் உறுப்பு ஒதுக்கீடு செய்வதற்கு விடியல் என்னும் தானியங்கி இணையதளம் 2021 ஆகஸ்ட் 13ஆம் நாள் தொடங்கப்பட்டது.

இந்த இணையதளம் நோயாளிகளின் உறுப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கு முறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 7137, கல்லீரல் வேண்டி காத்திருப்போர் எண்ணிக்கை 401 பேர், இதயம் வேண்டி காத்திருப்போர் 87, கணையம் 4 பேர், நுரையீரல் 51 பேர், இதயம் மற்றும் நுரையீரல் 23 பேர், கைகள் 25 பேர், சிறுகுடல் 3 பேர், சிறுநீரகமும் மற்றும் கல்லீரல் 37 பேர், சிறுநீரகம் மற்றும் கணையம் 45 பேர், ஆக மொத்தம் 7815 பேருக்கு உடலுறுப்புகள் தேவைப்படுகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சென்னை அரசுமருத்துவக்கல்லூரிமுதல்வர் மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை - உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் (வடக்கு) இப்ராகிம் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

மணலி அரசு மேனிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள்!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி வழங்கினர்!

சென்னை, செப். 8-

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணலி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் மாநில மீனவரணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்துகொண்டு திராவிட மாடல் அரசின் சார்பில் 470 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி நடைபெற்று முடிந்த பொது தேர்வில் 100% மாணவர்களை தேர்ச்சி பெற செய்த ஆசிரியர் பெருமக்களுக்கு பரிசு வழங்கி ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்து பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர் ஆசிரியை பெருமக்களுக்குப் பரிசு வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் 2024 25 ஆண்டிற்கான கலைத் திருவிழாவையும் துவக்கி வைத்தார்.

மேலும் 10ஆம் வகுப்பு மாணவன் கபில் தமிழின தலைவர் அய்யா கலைஞர் அவர்கள் எழுதிய பராசக்தி வசனத்தை பேசி அனைவரையும் மகிழ்வித்தார். அவரை வாழ்த்தி பாராட்டிய சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஊக்கத் தொகை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம், முதன்மை கல்வி அலுவலர் எஸ்.மார்ஸ், மண்டல நல அலுவலர் ஆர்.கோவிந்தராசு, ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளி தலைமை ஆசிரியர் கி.திலக், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் எம்.எஸ்.நாகலிங்கம் ஆகியோர் வரவேற்றனர்.

பள்ளி மேலாண்மை குழு தலைவி கே.தமிழ்ச் செல்வி நன்றி தெரிவித்தார்.

இதில் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் வி. குமார், கலை கே.சரவணன், எம்எஸ் ரவி, இ.இராமச்சந்திரன், சுமித்ரா, ஆதி மூலம், இளஞ்செழியன், மத்திய பகுதி துணை செயலாளர் துர்கா கோதண்டம், A.ராஜசேகர், ஆர்.டி.ரமேஷ் குமார், மகேந்திரன், மணலி சுரேஷ், வசந்த ராஜ், தரணி குமார், ஆனந்தகுமார், சுகுமார், வெற்றி கிருஷ்ண மூர்த்தி, செல்வராஜ், சுரேஷ், தயாநிதி, தீபன் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

எம்.பொன்னுசாமி (எ) ஜான் வரவேற்புரை!

பூண்டி வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவள்ளூர், செப்.8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பூண்டி வடக்கு ஒன்றியம் பொது உறுப்பினர்கள் கூட்டம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் சீத்தஞ் சேரி ஸ்ரீ தேவி திருமண மண்டபம் அவைத் தலைவர் இரா.இராகவன் தலைமையில் நடைபெறுகிறது.

பூண்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் எம்.பொன்னுசாமி (எ) ஜான் வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றிய நிர்வாகிகள் டி.வேல்முருகன், ஜி.டி.குருமூர்த்தி, பி.ஸ்ரீதேவி, எஸ்.நாகபூஷணம், டி.ஸ்ரீனிவாசலு, ஆர்.ரகு மு.பகலவன் பி.ஜெ.மூர்த்தி மு.கதிரவன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் ஏ.வி.ராமமூர்த்தி கே.சுப்பிரமணி பா.செ.குணசேகரன் பி.வெங்கடாசலபதி டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் கே.வி.லோகேஷ் கே.ராஜேஷ் ஜி.சுதாகர், ஜெ.வெஸ்லி, பி.சரசு பூபாலன், பி.சிவய்யர், என்.எம்.சுப்பிரமணி, ஆர்.கஜேந்திரன், பி.விஜயமாலா பாஸ்கர், டி.ஆர்.கே.வாசு, இ.யுவராஜ், கே.பி.சுரேஷ், எஸ்.பாலாஜி முன்னிலை வகிக்கின்றனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றுகிறார்.

மாநில நிர்வாகிகள் க.சுந்தரம், இஏபி.சிவாஜி, சி.எச்.சேகர் கே..ஜி.பாஸ்கர்சுந்தரம் வெ.அன்புவாணன் ஜி.ஸ்டாலின் ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர் மு.மணிபாலன் ஆ.சத்தியவேலு கி.வே.ஆனந்தகுமார் எம்.எஸ்.கே.ரமேஸ்ராஜ் பா.சுகுமார் கா.சு.ஜெகதீசன் நா.செல்வசேகரன் நா.பரிமளம்இ ஜி.ரவிக்குமார் கே.அபிராமிகுமரவேல் இரா.அறிவழகன் பி.முத்துக.சு.தமிழ்உதயன் ஏ.அப்துல்ரஹீத் என்.கிருஷ்ணமூர்த்தி மு.பாஸ்கரன் ப.தனசேகர் கே.ஆறுமுகம் க.சம்பத் வி.சுமன் எஸ்.கோபி வி.பி.ரவிக்குமார் எம்.ஆர்.ஸ்ரீதர்இ ஜி.ரமேஷ் டி.மணி கோல்டு.பி.மணி ஜெயலலி தாசசிதரன் டி.சங்கர் கழக செயலாளர்கள் ஒன்றியப்பிரதிநிதிகள் கிளைக்கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர்.

முடிவில் ஒன்றிய மாவட்ட பிரதிநிதி எஸ். நாகராஜ் நன்றியுரையாற்றுகிறார்.

எம்.ரூபன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை! மு.மனோகரன் பங்கேற்பு

மதுரவாயல் 146 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மாசுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப்.8

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி 146 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (8.9.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு மாரநாதா திருச்சபை அருகில், பலராமன் தெருவில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார். பகுதி துணைச் செயலாளர் தீ.பாலாஜி, மாவட்டப் பிரதிநிதி பி.சங்கர், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.,பி., மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக் கூட்டத்தில் பாலவாக்கம் மு.மனோகரன், மாஸ்டர் பெ.சேகர், ஆர்.கர்ணல், ஆ.மாலினி எம்.சி., எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார், பி.வாசு தேவன், எம்.சங்கர், பி.வி. சவுந்தர், ஏ.மணிகண்டன், வ.கண்ணன், எம்.அக்பர் ஷரிப், எம்.வாணிராஜ், சி.நாகபாலன், கே.ராஜன்தங்கமாறன்,டி.எஸ்.மகாதேவன், கே.தயாளன், ஜி.பழனி அரசு, என்.தங்கம் நாராயணன், ஓ.கோபி, பி. முருகேசன், பி.அழகர்சாமி, வி.டி.பாபு, என்.பிரகாஷ்,பி.ராமநாதன், ஜி.கண்ணன், எஸ்.துளசிராமன், வி.லிங்கம், எம்.மோகனராஜ், பி.சிவக்குமார், புரசை ஏ.சண்முகம், பி.ஆறுமுகம், கே.சேகர்,கே.எத்திராஜ், என்.செல்வராஜ், எஸ்.பி.மணி, ஜி.ராமதாஸ், சி.கே. சுப்பிரமணி, எம்.பாலவேல், பி.வேலாயுதம், கி.சுதாகர், கே.ஏழுமலை, த.குமரேசன், எஸ்.திலகர், எம்.கன்னியப்பன், ஆர்.தேவசுந்தரம் உள்பட பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் 146 வது வட்ட இளைஞர் அணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜெ.ஹேமச்சந்திரன், எம்.சுப்பு, ஏ. வினோத் குமார், ஆர்.மணிகண்டன், என்.இளவரசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் சிறப்புரை!

திருவொற்றியூர் 9வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

தி.மு.தனியரசு எம்.சி. முன்னிலை! எம்.எல்.சரவணன் வரவேற்புரை!

சென்னை. செப். 8-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 9வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (8.9.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் எம்.ஆர்.எப்.யூனியன் பட்டினத்தார் கோயில் தெரு திருவொற்றியூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.

9வது வட்டக் கழக செயலாளர் எம்.எல்.சரவணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

வட்ட அவைத் தலைவர் எஸ்.கண்ணையன் தலைமை வைக்கிறார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வீ.கண்ணதாசன், வழக்கறிஞர் வீ.கவீ. கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் 9வது வட்டக் கழக நிர்வாகிகள் து.செங்குட்டுவன், கே.ஜெய்சங்கர், பி.சுரேஷ், வட்ட பிரதிநிதிகள் கே.ஆர்.சி.ஜெயக்குமார் ராஜா, எஸ்.பிரகாஷ், கா.சீனி கண்ணன், எஸ்.ஆர்.ஸ்ரீதர், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.சி.ஆசைத்தம்பி, எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, இரா.குமரேசன் மற்றும் இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், பி.சாந்தி பக்தன், எஸ்.முத்தையா, மாமன்ற உறுப்பினர்கள் டி.சி.விராஜகுமாரி, சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர்,

வட்ட கழக செயலாளர்கள் த.கார்த்தி கேயன், டி.சி.வி.மணிகண்டன், எஸ்.தமிழ்ச்செல்வன், குருத்து சி.முனுசாமி, கவீ.சதீஷ்குமார், கேபிள் டிவி ராஜா, இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், 9வது வட்டக் கழக பாக முகவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை 9வது மாமன்ற உறுப்பினர் எஸ்.உமா சரவணன் செய்துள்ளார்.

நிறைவாக கௌசல்யா நன்றி கூறுகிறார்.

எஸ்.புகழேந்தி தலைமை ! வ.பெ.சுரேஷ் முன்னிலை !

52வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ஆர்.டி.சேகர் சிறப்புரை! கலாநிதி வீராசாமி – ஐட்ரீம் இரா.மூர்த்தி – என்.நவீன் பங்கேற்பு!

சென்னை, செப்8

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (09.09.2024 திங்கட்கிழமை) மாலை 5.30 மணியளவில் பாருக் மஹால் திருமண மண்டபத்தில் இராயபுரம் செ13ல் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமை வகிக்கிறார். இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மு.கோபி, இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், எஸ்.கீதாசுரேஷ் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், பிரியாணி எம்.பாலா, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.மொய்தீன், எச்.கருணாகரன், ஜெயா வினோர் ரீதர், ந.ஏகாம்பரம், ஜ.ஜார்ஜ் மார்டின், ஏ.தன சேகர், ஆ.வேளங்கன்னி, எம்.பன்னீர்செல்வம், எம்.இளங்கோவன், ஆர்.என்.மோசஸ், எஸ்.கயல்விழி, சி.சிவா, டி..விக்னேஷ், என்.அறிவுசெல்வன், எஸ்.சசிதரன், கோ.ஹரிஸ், வி.கபாலி, ஐ.நேருராஜன், ஆர்.பிருந்தா, டி.பி.சுரேகா, பி.அனிதா, ஆர்.விஜயவர்மன், எஸ்.கில்பர்ட், பி.ஷாஜகான், ப.அரசன், இரா.செ.ரவி, எஸ்.விஜயகுமார், முத்துகுமார், ஆரோக்கியதாஸ், நாகலிங்கம், எம்.தனஞ்செழியன், பி. திருப்பதி, ஆர்.ராஜன், பி.சுந்தர், எம்.சுரேஷ், பாலு, எஸ்.கில்பர்ட், பி.ராமமூர்த்தி, கோ.வேலு மணி, ஆர்.சதிஷ் குமார், டி.புருஷோத்தமன், ஜி.ஹரிகிருஷ்ணன், எஸ்.வினோத்குமார், டி..மதன், அ.ராஜாமணி, ஜெயக்கொடி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்.இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, என்.நவீன், ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் இரா.மதிவாணன், தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், கீ.ராஜேந்திரன், நா.சண்முகம், வே.சிவகுமார், க.நாகமை, வண்ணை புகாரி, வி.கே.குமார், கன்னகி, ராஜா, உஷாராணி, இல்க்கிய, கே.செல்வம், குணா, மாலா, மொய்தீன் பாஷா, சாதிக்பாஷா, கோகுல், மரகதம், அமீனாபீ, சுல்தனாபானு, முகமதுஜலால், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜ.லாரன்ஸ், எஸ்.வினோத்குமார், எம்.ரீகார்த்திகேயன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

5ஜி மொபைல் சந்தையில் 2வது இடம் - இந்தியா

புதுடெல்லி.செப்.8-

மொபைல் சந்தையில் முதல்முறையாக அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி 2வது இடத்தை இந்தியா பிடித்துள்ளது.

5ஜி மொபைல் சந்தையில் முதன்முறையாக இந்தியா 2வது இடத்தை பிடித்துள்ளது என கவுன்ட்டர் பாயிண்ட் ரிசர்ச் அறிக்கை. வெளியிட்டுள்ளது. 5ஜி மொபைல் சந்தையில் அமெரிக்கா 3வது இடத்தில் உள்ள நிலையில் சீனா முதலிடத்தை தக்கவைத்துள்ளது. 2024ம் ஆண்டின் முதல் பாதியில் உலகளாவிய 5ஜி மொபைல் ஏற்றுமதி 20% வளர்ச்சி கண்டது.

பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் குறித்து அவதூறாகப் பேசி மிரட்டிய மகா விஷ்ணுவைக் கண்டித்து

தூரித நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி!

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, செப்.8-

பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் குறித்து அவதூறாக பேசி பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆசிரியர் சங்கர் அவர்களை மிரட்டிய மகா விஷ்ணுவை துரித நடவடிக்கை எடுத்து கைது செய்த தமிழ்நாடு அரசிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்று நன்றி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சென்னை அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இடையே விழிப்புணர்வு என்ற பெயரில் மதத்தையும் மாற்றுத்திறனாளிகள் பிறப்பு பற்றி இழுப்படித்தி பேசி பிற்போக்கு சிந்தனையை மாணவிகளிடையே பரப்புரை செய்த மகா விஷ்ணு என்பவரை பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆசிரியர் சங்கர் அவர்கள் தட்டிக்கேட்டார் அப்போது ஆசிரியர் சங்கர் அவர்களை மிரட்டிய சம்பவம் மிகவும் வருத்தை ஏற்படுத்தியது இந்த சம்பவத்தை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் இந்த இழிவான செயலை அறிந்த பள்ளக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் தட்டிக்கேட்ட ஆசிரியர் சங்கர் அவர்களை மேடையில் ஏற்றி பாராட்டி மக்கத்தில் அமரவைத்து மேன்மைப்படுத்தினார் மேலும் ஆசிரியர்களை அவமானப்படுத்திய மகா விஷ்ணுவை சும்மாவிடமாட்டேன் என அறிவித்து இனிவரும் காலங்களில் ஆசிரியர்களுக்கு இது போன்ற சம்பவம் நடக்காத வண்ணம் நடவடிக்கை இருக்கும் என ஆசிரியர்களின் பாதுகாப்பை உணர்ச்சிப்பூர்மாக உறுதி செய்ததை நன்றியோடு வரவேற்கிறேன்.

மேலும் வெளிநாட்டில் இருக்கும் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து பணிகளையும் ஒதுக்கிவிட்டு மாற்றுத்திறனாளி ஆசிரியரை தரக்குறைவாக பேசிய சம்பவத்தை கண்டித்தோடு அல்லாமல் இனி இது போன்ற விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்த தடை விதித்து பள்ளிகளில் இனி ஆசிரியர்களைவைத்து மட்டுமே மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆசிரியர்களைவிட யார் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியும் என அறிவித்து இருப்பது போற்றுதலுக்கும் பாராட்டுக்கு உரியது இது எதனை காட்டுகிறது என்றால் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறு உருவம் என பறைசாற்றுவதையே காட்டுகிறது.

ஏதோ அந்த நேரத்திற்கு சமாளிப்பதற்காக அறிவித்த அறிவிப்பாக இல்லாமல் சொல்லவதை தான் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை ஏற்ற அரசு என்பதை உலகறியச் செய்து வெளிநாட்டில் இருந்த மகா விஷ்ணுவை செய்யக்கு வர வைத்து கைது செய்திருப்பது வரவேற்க பாராட்டி நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறோம் மீண்டும் ஒருமுறை மர்ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் பள்ளிக்கல்வி முதன்மை செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், பள்ளிக்கல்வி இநக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் அவர்களுக்கும் தொடக்கக்கல்வித்துறை இயக்குநர் நரேஷ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இனிவரும் காலங்களில் மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலகு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளையும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலமாக தலைமையாசிரியர் அனுமதியில்லாமல் அனுமதிக்க கூடாது என்ற கோரிக்கையையும் மாண்புமிகு இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.